RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20313

# மணிமேகலைக் காப்பியத்தில் புத்தசமய நெறி

## மு. ஹேமலதா [அ ,*]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா.

# The Buddhism Morality in The Epic Manimekalai

## M. Hemalatha [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women, Erode, Tamil Nadu, India.

Corresponding Author:
hemapreethi1974@gmail.com

Received : 08-03-2020
Accepted : 25-05-2020

Check for updates

**ABSTRACT**

Manimekalai is one of the five biggest epics. Its religious principle denotes that love and charity are the two eyes of the human life. Love all the human beings in the earth is the major principle of Buddhism. Live without any desire is the noble principle of Manimekalai. The highest altitude and goal of this poetry is Love. Restoration and realization of mankind is the highest doctrine of humanity. We realize the social outlook and voice of humanity by the author Saathanar in this manimekalai epic. The author registered the cruelty of hunger by the character "Theeva Thilakai".

**Keywords:** Manimekalai, Saathanar, Poetry, Five epics

## ஆசிரியர் குறிப்பு



முனைவர் மு.ஹேமலதா அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஈரோடு, வேளாளர் மகளிர் கல்லூரியில்(தன்னாட்சி) தமித்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். ஐம்பதுக்கும் மேற்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (UGC) நிதி உதவியுடன் குறுந்திட்ட ஆய்வை முடித்துள்ளார். இலக்கணம், தற்கால இலக்கியம், சமூகவியல் ஆய்வு ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

## ஆய்வுச்சுருக்கம்

மணிமேகலை ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. அன்பும் அறமும் மனித வாழ்க்கையின் இருகண்கள் என்பதனைச் சமயக் கொள்கையால் உணர்த்துவது. உலக உயர்களிடத்தில் அன்பு செலுத்துவதே புத்தசமயத்தின் உயிர்நெறியாகும்.- ஆசையைத் துறந்து வாழும் உயரிய நிலையை மணிமேகலைக் காப்பியம் உணர்த்துகின்றது. 'அன்பின் வழியது

உயர்நிலை' என்பதுதான் மணிமேகலைக் காப்பியத்தின் குறிக்கோள். - மனிதஇனத்தை மீட்டெடுக்கவும், மாண்புறச் செய்யவும் வந்த உயரிய கோட்பாடே மனிதநேயம் - சாத்தனாரின் சமுதாயப் பார்வையையும் மனிதநேயத்தின் குரலையும் மணிமேகலைக் காப்பியத்தில் காணமுடிகின்றது - பசியின் கொடுமையைப்பற்றித் 'தீவதிலகை" என்ற பாத்திரப்படைப்பின் குரலாய் பதிவு செய்கிறார்.

## முன்னுரை

**“பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி”**

மணிமேகலை துறவு ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றை கூறும் நூல் இது (Ottilingam Somasundaram and Tejus Murthy 2016). மணிமேகலை, துறவு பூண்டு வாழ்ந்த காரணத்தால் இது மணிமேகலைதுறவு என்று கூறப்பட்டது. இதில் புத்தமதத்தைச் சார்ந்த நூலாகக் கருதப்படுகிறது இதன் மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றுக் குறிப்புகள் சிலவற்றைக் காணமுடிகிறது. இதில் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவைகள் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மக்களின் உயிர்களுக்கு எல்லாம் மருந்தாவது உண்ணும் உணவு என்பதை மிகவும் வலியுறுத்தியுள்ளார். அன்பும் அறமும் மனித வாழ்க்கையின் இருகண்கள் என்பதனைச் சமயக் கொள்கையால் உணர்த்தும் பாங்கினை இக்கட்டுரை ஆய்கிறது.

## புத்தநெறியும் மனிதநேயமும்

உலக உயர்களிடத்தில் அன்பு செலுத்துவதே புத்தசமயத்தின் உயிர்நெறியாகும். ஆசையைத் துறந்து வாழும் உயரிய நிலையை மணிமேகலைக் காப்பியம் உணர்த்துகின்றது. 'அன்பின் வழியது உயர்நிலை' என்பதுதான் மணிமேகலைக் காப்பியத்தின் குறிக்கோள். பசிப்பிணி ஒழித்தல், பரத்தையர் ஒழிப்பு, மது ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு இவற்றைப் புத்தரின் போதனையில் காணமுடிகின்றது.

## மனிதநேயச் சிந்தனைகள்

முப்பது காதைகளைக் கொண்ட மணிமேகலைக் காப்பியம் புத்தமதச் சார்புடைய ஓர் இலக்கியம தமிழில் உள்ள முக்கியமான சமயக்காப்பியமாகும். மனித வாழ்வின் மாண்புகளை உணரவும், மனித வாழ்வின் இன்பங்களை நுகர முடியாதவண்ணம் தடுக்கப்பட்டு, இழிவுக்கும் பழிப்புக்கும் ஆளாக்கப்பட்டுக் கிடந்த மனிதனை, மனிதஇனத்தை மீட்டெடுக்கவும், மாண்புறச் செய்யவும் வந்த உயரிய கோட்பாடே மனிதநேயம். இந்த மனிதநேயத்தின் முழுவீச்சும் பேச்சும் மணிமேகலைக் காப்பியத்தில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது.

## பரத்தையர் ஒழிப்பு

1500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தமிழ்ச்சமூகத்தில் பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவியும், மணிமேகலையும் சுகபோகங்களையும் அவற்றுக்காகப் பெருகி வந்த வாய்ப்புகளையும் துறந்து, குலமகளிர் ஒழுக்கத்தை ஏற்று வாழ்வது அக்காலச் சமூகக் கட்டுக்கோப்புக்குள் இயலாத செயல் என்று தெளிந்து, மனிதகுலத்துக்கு அறம் கற்பித்த புத்தரது சமயம் சார்ந்து துறவு பூண்டனர்.

தங்களது சுற்றத்தினரும் அயலாரும் அரசும் எழுப்பிய எதிர்ப்பையும் பழிதூற்றலையும் கண்டு அஞ்சாது, துணிந்து மனிதகுலத்துக்காக மனித நேயப்புரட்சிக்கு வித்திட்ட வீரகுலச் செல்வங்கள்தான் மாதவியும், மணிமேகலையும் என்றால் மிகையாகாது. மணிமேகலைக் காப்பியத்தில் வரும் சித்திராபதி மணிமேகலையின் பாட்டி மாதவியின் தாய் பரத்தைமைத் தன்மை கொண்டவள். குலத்தொழில் என்ற பரத்தையர் ஒழிப்புக்கு குரல் கொடுத்த படைப்பு மணிமேகலைக் காப்பியமாகும். சங்க இலக்கியங்களில் பரத்தையர் நட்பு கண்டிக்கப்படவில்லை. திருக்குறள் ஒன்று தான் 'வரைவின் மகளிர்' என்று தனி அதிகாரத்தில் பரத்தையர் நட்பு கூடா நட்பு என்று குறிப்பிடுகிறார். சித்திராபதியின் கனவை உடைத்துப் புதுமைப் பெண்ணாகவும் புரட்சிப் பெண்ணாகவும் ஒளி வீசுகின்றாள் மணிமேகலை.

சாத்தனாரின் சமுதாயப் பார்வையையும் மனிதநேயத்தின் குரலையும் மணிமேகலைக் காப்பியத்தில் காணமுடிகின்றது. பலஆயிரம் ஆண்டுகளாக இருந்த பரத்தையர்களின் அவலத்தை மனிதநேயத்தோடு புதிய தடத்தில் சாத்தனார் பதிவு செய்துள்ள விதம் மிகப்பெரிய மனிதநேயப்புரட்சி ஆகும்.

உதயகுமரன் போன்ற அரசகுமரன் விரும்பினால் அது தங்களுக்குப் பெருமை எனக்கருதி, உதயகுமரனின் இச்சைக்கு மணிமேகலை இசைய வேண்டும் என்று மணிமேகலையின் பாட்டி சித்திராபதி பின்வருமாறு கூறுகின்றாள்.

**“நாடவர்காண நல்லாங்கேறி**
**ஆடலும் பாடலும் அழகுங் காட்டி**
**கண்டோர் நெஞ்சங்கொண்ட கம்புக்கு**
**பண்டோர் மொழியிற் பயன்பல வாங்கி**
**வண்டிற் றுறங்குங் கொண்டி மகளிரை**
**பான்மையிற் பிணித்து படிற்றுரை யடக்குதல்**
**கோன்முறை யன்றோ"**

**(மணிமேகலை உதயகுமரன் அம்பலம் புக்க காதை வரிகள்:15-16)**

என்று கூறுவதன் மூலம் பரத்தையர் நிலையைச் சாத்தனார் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார் (Guruswamy and Srinivasan, 1993). சித்திராபதியின் எண்ணம் நிறைவேறவில்லை. சித்திராபதியின் மகள் மாதவி பரத்தைக்குப் பிறந்தவளே யொழிய அந்தத் தொழில் புரிந்தவள் அல்லள். தன்னுடைய மகள் மணிமேகலையை நேசித்தாள்.

மாதவி மணிமேகலையைத் தன் மகள் அல்லள். கண்ணகியின் மகள் என்று கூறுகின்றாள். மாபெரும் பத்தினிமகள் மணிமேகலை அருத்தவபடுத்தல் அல்லது யாவதும்

திருந்தாச்செய்கை தீத்தொழில்படாஅள் என்று குறிப்பிடுகின்றாள். நான் புத்தமதத்தில் சேர்ந்து விட்டேன் இதைச் சித்திராபதிக்குச் செப்பு நீ என்று வயந்த மாலையிடம் மாதவி கூறுகின்றாள். சேற்றிலே பிறந்த செந்தாமரையாய் ஒளி வீசுகின்ற நிலையை அறியமுடிகின்றது. பரத்தையர் அமைப்பு முறையைச் சாத்தனார் முற்றிலும் எதிர்த்தார். மனிதநேயத்தின் குரலாய் பரத்தையரும் குலமகளிராய் வாழ்தல் சிறப்பு என்பதை நன்கு மணிமேகலைக்காப்பியத்தில் தெளிவுபடுத்தியுள்ளதை அறியமுடிகின்றது. எல்லாக்குற்றங்களுக்கும் மூலக்காரணம் பரத்தையர் அமைப்பு முறைதான் என்பதை 1500 ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசனமாய் சாத்தனார் தெளிவுபடுத்தியுள்ளார்.

பரத்தையர் ஒழிப்பின் மூலம் சாத்தனார் ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப்பண்பாட்டை வலியுறுத்தியுள்ளார்.

**'பத்தினிப்பெண்டிர் அல்லோம் பலர்தம்**
**கைத்தூண் வாழ்க்கை கடவிய மன்றோ'**

**(மேலது, பாத்திரம் பெற்றகாதை, வரிகள்:96-97)**

என்ற சித்திராபதியின் கூற்றைச் சாத்தனார் உடைத்து எறிந்து புதிய சரித்திரம் படைத்துள்ளார் (Guruswamy and Srinivasan, 1993).

பரத்தையர் நட்பால் ஏற்படும் இன்னல்களை ஆதிரையின் கணவன் சாதுவன் என்ற கதையால் சாத்தனார் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார். உதயகுமரன் போன்ற காமவெறி கொண்ட ஆடவர்களுக்கு அறிவுரை கூறித் திருத்துவது ஓர் சமுதாயப்புரட்சி என்றே கூறலாம்.

## பசிப்பிணி ஒழிப்பு

'பசி' என்பது இயற்கையானது. அது தீர்க்கப்பட வேண்டும். பசிதான் எல்லாக்குற்றங்களுக்கு அடிப்படை என்பதைச் சாத்தனார் நன்கு உணர்த்தியுள்ளார். பசியைப் பாடாத கவிஞர்களே இல்லை என்று கூறலாம். பசியைத் திருவள்ளுவர் 'பசி எனும் தீப்பிணி' என்று குறிப்பிடுகிறார். பசி என்பது மனித குலத்தை அழிக்கும் நோய் என்று கூறுவர்.

1500 ஆண்டுகளுக்கு முன்னரே சாத்தனார் பசியை ஒழிக்க 'அமுத சுரபி' என்ற அட்சயப் பாத்திரத்தை மனித நேயத்தோடு அறிமுகப்படுத்தியுள்ளார்.

பசி, பிணி, நோய் இம்மூன்றும் மனித சமுதாயத்தை தீண்டக் கூடாது.

**'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (மேலது, பாத்திரம் பெற்றகாதை, வரிகள்:86-87)**

என்ற உயிர்க்கோட்பாடுதான் மணிமேகலைக்காப்பியத்தில் குறிக்கோள்;. பசியின் கொடுமை எல்லாவற்றையும்விட கொடுமையானது. "பசி வந்தால் பத்தும் பறக்கும்" என்பர். குடிமை, பெருமை,கல்வி,நாண், தோற்றம் என்ற நல்லறங்கள் 'பசித்தீ' முன்னர் அழிந்து பொசுங்கி விடும் (Guruswamy and Srinivasan, 1993).

பசியின் கொடுமையைப்பற்றித் 'தீவதிலகை" என்ற பாத்திரப்படைப்பின் குரலாய் சாத்தனார் பின் வருமாறு பதிவு செய்கிறார்.

**'குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்**

**பசிப்பிணி என்னும் பாவி" (மேலது, அறவணர்த் தொழுத காதை, வரிகள்:116-118)**

என்று மனிதநேயச்சிந்தனையை அழிக்கும் பண்பு பசிக்கு உண்டு என்பதைச் சாத்தனார் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது.

காயசண்டிகையானவள் “யானைத்தீ” என்னும் கொடும் பசியால் துன்புறுகிறாள். மணிமேகலை அமுத சுரபியில் இருந்து உணவை எடுத்து அளித்து அவளுடைய பசித்தீயைப் போக்குகின்றாள். பிறர் துன்பம் கண்டு உதவும் மனிதநேயத்தின் பிறப்பாய் மணிமேகலை திகழ்வதை அறிய முடிகின்றது.

சோற்றை ஆருயிர் மருந்தென்றும், அதனை வழங்குவோரை
ஆருயிர் மருத்துவர் என்றும் சாத்தனார் குறிப்பிடுகிறார். மனிதர்களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுப்பதே அறம் என்று சாத்தனார் உணர்த்தியுள்ளார்.

பசிப்பிணி பற்றிச் சாத்தனார் அறவண அடிகளின் குரலாய் மணிமேகலை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**“மக்கள் தேவர் என இருசாரர்க்கும்**

**ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்**

**பசிப்பிணி தீர்த்தல்" (மேலது, ஆதிரை பிச்சையிட்ட காதை, வரிகள்:131-136)**

பசிப்பிணி தீர்த்தல் தலைசிறந்த மனிதநேயப் பண்பு என்பதை இதன்மூலம் உணர முடிகின்றது.

“ஆபுத்திரன் கதை" மனித நேயத்தின் குறியீடு என்றே கூறலாம். அனாதையாகக்கிடந்த குழந்தையைப் பசு பால் கொடுத்து வளர்த்த நிகழ்வு மனித நேயத்தின் பிழிவு என்றே கூறலாம். ஆபுத்திரன் கையில் இருந்த அமுத சுரபி மணிமேகலை கைக்கு வருகின்றது. அமுதசுரபியில் ஆதிரைப் பிச்சை இடுகின்றாள். இதனைச் சாத்தனார் பின்வருமாறு படம் பிடித்துக்காட்டுகிறார்.

**'மனையகம் புகுந்து மணிமேகலைதான்**

**புனையா ஓவியம் போல நிற்றலும்**

**தொழுது வலங் கொண்டு துயரறு கிளவியோடு**

**பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென**

**ஆதிரையிட்டனள் ஆருயிர் மருந்தென" (மேலது, விழாவறை காதை, வரிகள்:70-72)**

கிள்ளிக்கொடுக்காது அள்ளிக் கொடுத்தால் வெள்ளம் பெருகும் என்பதைக் காய சண்டிகையின் “யானைத்தீ” என்னும் கொடும் பசியை அடக்கியதன் மூலம் சாத்தனார் எடுத்துக்காட்டுகிறார்.

**'பசியும் பிணியும் பகையும் நீங்கி**

**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி**

**அணி விழா அறைந்தனள் அகநகர் மருங்கென்"**

**(கே.டி.கே, தங்கமணி, மணிமேகலை பற்றி, ப-139)**

என்று குடிமக்களின் வாழ்வில் பசி, நோய், பகை நீங்கி வளம் செழிக்க வேண்டும் என்று மணிமேகலை உரைக்கின்றது. தானத்தில் சிறந்தது அன்னதானம். இன்று

ஆலயங்களில் நடைபெறும் அன்னதானத்திற்கு மணிமேகலைக் காப்பியம் தான் அடிப்படை என்று கூறலாம் (Pandian, 1989).

கள் உண்டலும் பிற உயிர்களைக் கொன்று திண்பதும் நல்லறங்கள் ஆகாது. அறம்புரிவோர் சுவர்க்கம் புகுவர். பாவம் செய்வோர் நரகம் அடைவர். பாவத்தை ஒழித்துப்புண்ணியம் செய்யும் மனித நேயத்தை மணிமேகலை வாயிலாக அறிய முடிகின்றது. இதுவே புத்த சமயத்தின் உயரிய நெறியாகும்.

## முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் மணிமேகலைக் காப்பியம் மனிதநேயத்தின் திறவுகோலாக விளங்குகின்றது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்ற உயரிய சிந்தனையை மணிமேகலைக்காப்பியம் மனித குலத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளது. “மனிதநேயம்” என்பது மனிதனை மனிதன் நேசிப்பதாகும். மதம், சாதி, நிறவேற்றுமை மறந்து உயிரை நேசிக்கச் சொல்வது மனிதநேயம் என்று கண்டறியப்பட்டுள்ளது. அன்பு ஒன்றுதான் மனிதநேயத்தின் திறவுகோல் அதன் வளர்ச்சியே மனிதநேயக்கோட்பாடு. இதுவே புத்தரின் உயிர்க்கோட்பாடு. மனித நேயத்தின் குறிக்கோள். இம்மண்ணில் உயிர்களை நேசித்தல் ஆகும். பரத்தையர் குலம் ஒழிப்பு. பசிப்பிணி ஒழிப்பு, மது ஒழிப்பு, சிறை ஒழிப்பு. சாதி ஒழிப்பு போன்ற பல சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியமாக மணிமேகலைக் காப்பியம் திகழ்கின்றது. மக்கள் அனைவரும் பட்டினி இல்லாது வாழ அமுத சுரபி குறியீடாகப் படைக்கப்பட்டுள்ளது. உலகம் நிலையில்லாதது. உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதை மணிமேகலை எடுத்துக்காட்டுகின்றது. உடல் அழியும். இளமை நீங்கும் அழகு அழியும். இன்பம் நிலைக்காது. அறம் ஒன்றே உலகில் அழியாதது என்ற புத்தரின் போதனை வழி மனித நேயச்சிந்தனை வலியுறுத்தப்பட்டுள்ளதை நன்கு அறியமுடிகின்றது.

## References


Ottilingam Somasundaram and Tejus Murthy, A.G., Indian Journal of Psychiatry. 58 (2016) 229–232. https://dx.doi.org/10.4103%2F0019-5545.183788

Guruswamy G, Srinivasan S (1993). Manimekalai – Retold in English. Dr. U.V Swaminatha Aiyar Library, Besant Nagar, Madras-90.

Pandian P. (1989). Manimekalai. The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnelvelly, Limited, Madras-18.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License